முன்னிலை : திரு. பா. சரவணன், பி.எஸ்.சி.பி.எல்.,

சார்பு நீதிபதி, பெருந்துறை.

| OS 108/16 |
|---|
| வா.சா.1(பழனிசாமி) |
| நாள் 05.03.19 |

1969ம் ஆண்டின் 54 வது சட்டப் பிரிவு 5(2) ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

**குறுக்கு விசாரணை ( 7ம் பிரதிவாதி தரப்பில்)**

எனக்கு எழுத படிக்க தெரியாது. இந்த வழக்கை பொதுவாக இருக்கம் நிலத்தை பிரித்து தர கேட்டுள்ளேன். வழக்கில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கே நேரடியாக தெரியும். நானே அனுபவித்து வருகிறேன், அதனால் தெரியும். என் தந்தை முத்துக்கவுண்டர் எப்போது தாவா சொத்தை வாங்கினார், அதற்கு பின் யார் யார் எப்போது கிரயம் வாங்கினார்கள் என்ற விவரம குறிப்பாக தெரியாது. ராமசாமி, சென்னியப்பன் (1,2 பிரதிவாதிகள்) ஆகியோர் என் சகோதரர்கள். என் சகோதரி ராசம்மாள் 2012 ல் இறந்தார். மாதம், தேதி தெரியாது. ராசம்மாள் எங்கள்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை கிரயம் வாங்கவில்லை. எனக்கு இந்த சொத்தில் எப்படி உரிமை கோருகிறேன் என்றால், ராசம்மாளிடமிருந்து நான் 1980 ல் கிரயம் பெற்றுள்ளேன். சென்னியப்பன் ராசம்மாளிடம் கிரயத்திற்கு வாங்கினார். ராமசாமி கல்யாண சுந்தரம் பிள்ளையிடம் வாங்கினார். ராசம்மாள் இறந்த பின் ராசம்மாளின் வாரிசுகளுக்கு பாகம் உள்ளதா இல்லையா என்றால் சட்டப்படி பாகம் இருந்தால் எடுத்துக் கொள்ளட்டும். வழக்கில் அவர்களுக்கு பாகம் இருந்தால் எடுத்துக் கொள்ளட்டும் என்று தான் சொல்லியுள்ளேன். எனக்கு எல்லா விவரங்களும் நன்றாக தெரியும் என்றம தற்போது வழக்கிற்காக நடிக்கிறேன் என்றால் சரியல்ல. 6,7 பிரதவாதிகள் இறந்து போன ராமசாமி கவுண்டரின் வாரிசுகள் என்று தெரியும். தாவா சொத்தில் ராமசாமி கவுண்டருக்கு எப்படி பாத்தியம் என்பதை அவர்கள் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார்கள் என்றால் தெரியாது.ராமசாமி கவுண்டர் 1956 லியே கிரய வகையிலும், அவர் சகோதரரிடம் ஏற்படுத்திக் கொண்ட பாக வகையிலும் 1958 ல் வாங்கிய கிரய வகையில்ும் நான்கு எல்லை கண்டு கிரயம் பெற்ற வகையில் 4 ஏக்கர் 86 1/2 சென்ட் பாத்தியம என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி கண்ணம்மாளின் கணவர் இறந்து விட்டார். அவர் இறந்த பின் 6,7 பிரதிவாதிகள் அவர் சொத்தை பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் அது பற்றி தெரியாது. 6ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட் சொத்தை 8ம் பிரதிவாதிக்கு விற்றதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி.

அதன்படி 8ம் பிரதிவாதிக்கு பாத்தியம் உண்டு என்றால் சரிதான். பொது பாத்தியம் உள்ளது. 6,7 பிரதிவாதிகள் வீட்டை ஒட்டி கம்பி வேலி கிழமேலாக உள்ளது. அது பொதுவில் போடப்பட்டது. அந்த கம்பி வேலி 8ம் பிரதிவாதி கிரயம் பெற்ற பின் அவரது அத்தில் அமைத்தது என்றால் சரியல்ல. அது அத்து அல்ல. 6,7 பிரதிவாதிகளின் வீட்டின் முன்புறம் உள்ள கிணற்றில் உள்ள மின் இணைப்பு மற்றும் கிணறு ஆகியவை இறந்து போன ராமசாமி கவுண்டருக்கு தனிப்பட்ட வகையில் பாத்தியப்படடது என்றால் சரியல்ல. பொதுவில் பாத்தியப்பட்டது. நான் சொல்வத தவறு என்றும, கிணறு மற்றும மின் மோட்டாரை வழக்கு சொத்தில் காட்படவில்லை என்றும், அது ராமசாமி கவுண்டரின் தனிப்படட சொத்து என்பதால் தான் காட்டப்படவில்லை என்றர்ல் சரியல்ல. வழக்கு சொத்தின் பழைய கச 165 . அது சிங்காநல்லூர் கிராமத்தில் உள்ளது. எனக்கு கிரயம் கொடுத்தவர்கள் பெயர்கள் வருவாய் ஆவணங்களில் நில உரிமையாளர்கள் என்ற இடத்தில் இருந்ததா என்று தெரியாது. எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து ரீ சர்வே எண் 178/1,2 ல் ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ 5 ஆக எனக்கு பாத்தியப்படட சொத்துக்களுக்கும 6,7 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்படட சொத்திற்குரிய வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட சொத்தைபொறுத்து விவசாய கூட்டுறவு சங்கதிலோ வங்கியிலோ கடன் வாங்கவில்லை. அவர்களை சாட்சிகளாக விசாரிக்க எனக்கு ஆட்சேபணை இல்லை. தாவா நிலத்தில் அடமான கடன் வாங்கவில்லை. வேறு நிலத்தை பொறுத்து தான் வாங்கியுள்ளேன். அரசு வழங்கிய நிவாரண நிதியை தாவா செர்ததை பொறுத்து நான் அனுபவிக்கும பகுதிக்கு வாங்கினேன் என்றால் எந்த நிலத்திற்கு கொடுத்தார்கள் என்று தெரியாது. எனக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்கள் விவரங்கள் தெரியாது. எனது வழக்கறிவிப்பில் ராமசாமி கவுண்டர் 1956ல் கிரயம் பெற்றதை சொல்லவில்லை. ராமசாமி கவுண்டர் தனிப்பட்ட முறையில் நான்கு எல்லை கண்டு கிரயம் பெற்றார் என்றும், அதை தான் தனிப்படட வகையில் அனுபவித்து வருகிறார்கள் என்றும், இந்த விவரம் தெரிந்ததால் தான் அது பற்றி ஆவணங்களை தாக்கல் செய்யாமல' மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. ரீச. 177/1,2 ல் தென்னை மரம் மற்றும்கருப்பு பயிரிட்டு 7ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. பொதுவில் தான் அனுபவித்து வருகிறார். சொத்து பொதுவில் அனுபவத்தில் இருக்கிறது என்பதை காட்ட தனி நபர் சாட்சியை நான் விசாரிக்கபோவதில்லை. தேவைப்பட்டால் நீங்கள் விசாரித்துக் கொள்ளுங்கள். பொதுவாக இருக்கிறது என்று கூறும நான்

தான் அதை நிருபிக்க வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து பொதுவாக இருப்பதாலும் அதை 2016 ஜனவரி மாதம் பிரித்து தருமாறு கேட்டதாகவும வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்யும் முன்பு 6,7 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஏற்கனவே பிரிவினை ஆகிவிட்டது என்பது தெரிந்து கொண்டு அவர்களை துன்புறுத்த வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. நான் கிரயம் பெறுவதற்கு 20 வருடங்களுக்கு முன்பே 6,7 பிரதிவாதிகளின் முன்னோரான ராமசாமி கிரயம் வாங்கி விட்டார் என்றால் சரியல்ல. அந்த சொத்தில் ஒரு பகுதி பாறையாக உள்ளது என்றால் காடு அனைத்துமே பாறையாக தான் உள்ளது. நான் அனுபவிக்கும் பகுதியை அதனால் தான` அபிவிருத்தி செய்யவில்லை என்றால் பொதுவாக இருப்பதால் அபிவிருத்தி செய்யவில்லை. 6,7 பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பகுதியை அபிவிருத்தி செய்து கிணறு வெட்டி ஆழ்குழாய் கிணறு வைத்து தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பாறை உள்ள பகுதியில் சுமார் 6,7 குடும்பங்கள் 70 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி தொடர்ந்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் வீடு கட்டி கரண்ட் சர்வீஸ்வாங்கியுள்ளார்கள். அவர்களுக்கு பட்டா இல்லை. தாவா சொத்து தவிர எங்கள் குடும்பததிற்கு 6 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலத்தைர பொறத்தும் பாகக்றார் செய்யவில்லை. இந்த வழக்கில அந்த நிலத்தை சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.அது வேறு நிலம். சர்வே எண் 177 ல் 6,7 பிரதிவாதிகளுக்கு சொந்தமான வீடு உள்ளது. 6,7 பிரதிவாதிகளுக்கு பின்னிடடு அந்த வீடு மற்றும நிலத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 7 ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு மூலம் இல்லாமல் பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி யாக வேண்டும் என்றால சரியல்ல.

**<u>8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

6 முதல் 8 பிரதிவாதிகள் எனக்கு உறவு முறை இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கை நான் மட்டும் தான் நடத்துகிறேன். 6 முதல் 8 பிரதிவாதிகளை எதற்காக சேர்த்துள்ளேன் என்றால் சொத்து பொதுவாக இருப்பதால சேர்த்துள்ளேன். கிரயம் வாங்கிய வகையில் சொத்து பொதுவாக உள்ளது. சர்வே எண் 165 ல் கண்ட சொத்து பொதுவாக உள்ளது. இதில் 9 ஏக்கர் 73 சென்ட் உள்ளது. இந்த வழக்கில் 9 ஏக்கர் 73 சென்ட் முழுவதையும் சேர்த்து

தான் வழக்கு போட்டுள்ளேன். அதில் எனக்கு 1 ஏக்கர் 21 1/2 சென்ட் பாத்தியம். நான் 1980 ல் கிரயம் பெற்றேன். அப்போதிலிருந்து 1 ஏக்கர் 21 1/2 சென்டை தான் ஓட்டி வருகிறேன். பழைய சர்வே எண் 165க்கு புதிய சர்வே எண் மற்றும சப் டிவிசன் எண் தெரியாது. ஆனால் சப் டிவிசன் ஆகியுள்ளது என்பது தெரியும். நான் இந்தவழக்கில் 165க்கு புதிய ரீ.சர்வே எண் மற்றும அதன் அனைத்து சப் டிவிசன்களையும் காட்டவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை முழுமையாக காட்டவில்லை என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. 8ம் பிரதிவாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை பற்றி தெரிந்து கொண்டேன். 27.4.1937 தேதியில் ஒரு பழனிகவுண்டரும் அம்மாசை கவுண்டரும் சேர்ந்து சர்வே எண் 165 ல் செக்குபந்தி கண்டு 4 ஏக்கர் 86 1/2 சென்டை கிரயம் பெற்றனர் என்றால் சரிதான். 21.6.1956 தேதியில் பழனிகவுண்டர் மற்றும் அவரின் மகன்கள் சென்னிமலை கவுண்டர், இளையா கவுண்டர், வீரப்பன் மற்றும் சோமுக் கவுண்டர் ஆகியோர் அம்மாசை கவுண்டர் மகன்களான சென்னிமலை கவுண்டர் மற்றும் ராமசாமி கவுண்டருக்கு விற்று விட்டார்கள் என்றால் சரிதான். ஏற்கனவே 1937 ல் கிரயம் பெற்ற வகையிலு் பின்னிட்டு 1956 ல் கிரயம் பெற்றதும் சேர்த்து 4 ஏக்ர் 86 1/2 சென்டை அம்மாசை கவுண்டர் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். அதன் பின் 1956 ல் பத்திர எண் 1359/56 ன் கீழ் அம்மாசை கவுண்டரும் அவரின் மகன்களான சென்னிமலை கவுண்டர் மற்றும் ராமசாமி கவுண்டா ஒரு பதிவு செய்த பாகபத்திரத்தை எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாக பத்திரத்தல் சென்னிமலை கவுண்டருக்கு பிரிந்த சொத்தை தன் சகோதரர் ராமசாமி கவுண்டருக்கு 22.4.1958 ல் விற்று விட்டார் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி பத்திரப்படி ராமசாமி கவுண்டர் 4 ஏக்கர் 86 1/2 சென்டை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். அந்த கிரய பத்திரத்தில் கண்ட விவரங்களை நான் மறுக்கவில்லை. ராமசாமி கவுண்டரின் வாரிசுகள் தான் 6,7 பிரதிவாதிகளான கண்ணம்மாள, ஜெயலட்சமி என்றால் சரிதான். ராமசாமி கவுண்டர் இறக்கும் முன்பு அவர் மகன் தங்கமுத்து இறந்து விட்டார். தங்கமுத்துவின் மனைவி தான் 6ம் பிரதிவாதி என்றால் சரி. 7ம் பிரதிவாதி ராமசாமி யின் மகள். க.ச எண் 165 ல் கண்ட சொத்து மற்றும் இதர சொத்துக்களை பொறுத்து கண்ணம்மாள மற்றும 'ஜெயலட்சுமி ஆகியோர் 24.11.11 ல் ஒரு பாக பத்திரம ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் அது பற்றி தெரியாது. அந்த பத்திரம் அமுலுக்கு வந்து மேற்படி பத்திரப்படி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பொதுவில் தான் அனுபவிக்கிறார்கள். பொதுவில்

அனுவிப்பதாக எந்த ஆதாரமும் இன்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 19.4.16 ல் வழக்கு சொத்தை பொறுத்து பட்டா மாறுதல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த பின் அதை பற்றி நான் ஆட்சேபணை தாக்கல் செய்யவில்லை. 6,7பிரதிவதிகளுக்கு பாகப பிரிவனை படி விற்ற சொத்தை தான் 8ம் பிரதிவாதிக்கு விற்றனர் என்றால் சரி. 8ம் பிரதிவாதியின் கிரய பத்திரத்தை நான் மறுக்கவில்லையா என்றால் மறுக்கிறேன். பொதுச் சொத்தை கிரயம் பெற்றுள்ளதால் மறுக்கிறேன். நான் சொன்னதுபோல் 8ம் பிரதிவாதி பொது சொத்தைை கிரயம் பெறவில்லை என்றால் சரியல்ல. 1937 ம் வருடததில் இருந்து செக்குபந்தி கண்டு, தனிப்பட்ட முறையில் அனுபவித்து, இரு முறை பாகக்கறார் ஏற்பட்டது என்றும் , அதன்படி கிரயம் பெற்ற 8ம் பிரதிவாதியின் கிரய பத்திரத்தை மறுக்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் தார்சு வீடு உள்ளது. அது ராமசாமி கவுண்டர் கட்டிய வீடாகும். அதையும் சேர்த்து தான் 8ம் பிரதிவாதி கிரயம் வாங்கியுள்ளார் என்றால் தெரியாது. 8ம் பிரதிவாதியின் கிரய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். அதை படித்து பார்க்கவில்லை. அந்த கிரய பத்திரத்தில் கிரய சொத்தின் மதிப்பு ரூ. 16 லட்சத்து 54 ஆயிரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. வழக்கு சொத்தை குறைவாக மதிப்பீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள ரீச சர்வேஎண் 177/1,2 ல் எனக்கு எந்த பங்கு பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் ரீசர்வே எண் 177/1,2ம் எனக்கு பாத்தியம் இருப்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பட்டாவில் ராமசாமி, கண்ணம்மாள், ஜெயலட்சுமி ஆகியோா பெயர் உள்ளது என்றால் தெரியாது. நான் வா.சா.ஆ 5 ல் ஒரு பகுதியாக ரீச 178/1,2 ன் பட்டாவும் தாக்கல் செய்துள்ளேன என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் இருந்து 177/1,2 ல் எனக்கு பாத்தியம் இல்லை என்று நிருபணம் ஆகியுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு ரீச. 178/1,2 ல் மட்டுமே பாத்தியம என்றும், அதை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ரீச எண் 177/1,2 ல் பாகம் கோர எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. ரீ.ச 177/1,2 ல் உள்ள கிணறு,போர்வெல், மின் இணைப்பு ஆகியவற்றை சேர்க்காமல் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 8ம் பிரதிவாதி கிரயம் பெற்று சமன் செய்து கம்பி வேலி அமைத்து அவர்கள் நிலத்தை மேம்பாடு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 7 படி 8ம்

*பிரதிவாதி அனுபவிப்பதை ஆடசேபணை செய்யவோ, அதில் பங்கு கேட்கவோ உரிமை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 7ல் கண்ட சொத்திற்கும் எனக்கோ, 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் எந்த உரிமையோ, பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல.எனது வழக்கு பொய்யானது என்றும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றம சொன்னால் சரியல்ல. வழக்கு மூலம் பொய்யானது என்றால் சரியல்ல. நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு மூலமே இல்லை என்றால் சரியல்ல. 8ம் பிரதிவாதி பொறுத்து செலவுத் தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.*

Uploaded by

SS